செ.வெ.எண்: 588 நாள். 13.07.2010.

# செய்தி வெளியீடு

## மதுரை–இராமேஸ்வரம்–கன்னியாகுமரி சுற்றுலா மேம்பாட்டிற்கு ரூ. 36.48 கோடி நிதி ஒதுக்கீடு

கடந்த சில ஆண்டுகளாக *"தமிழக அரசின் சுற்றுலாத்துறை"* பல்வேறு நிலைகளில் மிகுந்த அளவில் வளர்ச்சி அடைந்து வருகிறது. பல சுற்றுலாத் திட்டங்களுக்கு மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்து, திட்டப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மாநில அரசின் கோரிக்கைகளின் அடிப்படையில் மைய அரசும் சுற்றுலா திட்டப்பணிகளுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது.

தமிழ்ச்சங்கங்கள் அரங்கேறிய ***மதுரை,*** தீவு நகரமான ***இராமேஸ்வரம்,*** தமிழகத்தின் தென்கோடி முனையான ***கன்னியாகுமரி*** போன்ற இடங்களில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் பல்வேறு திட்டங்களுக்காக ஒரு ***"சுற்றுலாப் பெருந்திட்டம்"*** மத்திய அரசின் நிதியுதவி வேண்டி அனுப்பப்பட்டது. தமிழக அரசின் சீரிய முயற்சியின் பலனாக தற்போது மத்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் மேற்காணும் சுற்றுலாப் பெருந்திட்டத்திற்கு மத்திய அரசின் நிதியுதவியாக **ரூ. 36.48 கோடி** ஒப்புதல் வழங்கி முதல் தவணையாக **ரூ. 18.24 கோடி** விடுவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து தமிழக அரசின் அரசாணை எண். **142,** சுற்றுலா மற்றும் பண்பாட்டு **(சு1)** த்துறை, நாள் **12–07–2010–ன்** படி மேற்காணும் தொகை இப்பணிகளின் செயலாக்கத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ்:–

- ❖ மதுரையில் மீனாட்சி அம்மன் கோவில், விளக்குத்தூண், புதுமண்டபம், மாரியம்மன் கோவில் தெப்பக்குளம் போன்ற இடங்களிலும்,
- ❖ இராமேஸ்வரத்தில் அக்னிதீர்த்தம், லட்சுமண தீர்த்தம், ராமர் தீர்த்தம், வில்லூன்டி தீர்த்தம், கோதண்டராமர் கோயில், ராமர் பாதம் சாலை, ரயில்வே பீடர் ரோடு, பேருந்து நிலையம் போன்ற இடங்களில் இடங்களிலும்,
- ❖ கன்னியாகுமரியில் திரிவேணிசங்கமம், கடற்கரை உள்பட பல்வேறு இடங்களிலும், சுற்றுலா மேம்பாட்டு வசதிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலும், பல அரிய சுற்றுலாத்திட்டங்கள் நிறைவேற்றப்பட தமிழக சுற்றுலாத் துறையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

13/7/10

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

13/7/10
செயலாளர்